விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2020

---

## 1. நிதிககூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரை மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 76 பந்தியின் (இ) பிரகாரம் அறிக்கையிடும் திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் தீர்வையாகும் என எதிர்பார்க்கப்படும் மொத்தம் ரூபா 429,868,066 ஆன நிலையான வைப்பு மீதியை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்க வேண்டிய போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எம்மால் நிலையான வைப்புக்களில் நிதி முதலீடு வருடாந்தம் சுயமாக புதுப்பிக்கும் (Auto Renewal) அடிப்படையில் நீண்டகால முதலீட்டு நலன்களை பெறும் அபிலாசையில் இருப்பதால் நீண்டகாலமாக நிலையான வைப்புக்கள் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீட்டுக் கொள்கையொன்றாக எம்மால் பின்பற்றப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 7 இன் 47 பந்தியின் பிரகாரம் 2010 மற்றும் 2011 ஆண்டுகளின் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 15,116,057 பெறுமதியான | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட தொற்று நிலைமை காரணமாக சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாததுடன் எதிர்காலத்தில் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் அச்சொத்துக்களை மீண்டும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016/2017 மற்றும் 2017/2018 ஆம் கலவியாண்டுகளுக்காக பெற வேண்டிய பாடநெறிக் கட்டணங்கள் வருமானமாக இனங்காணப்பட்டுள்ள ரூபா 11,223,850 தொகை முன்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்த காரணத்தினால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எம்மால் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையே பெறவேண்டிய பாடநெறிக் கட்டணங்களை கணக்கீடு செய்யும் கொள்கையாக பின்பற்றப்படுகின்றது. 2020 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய அனைத்து பாடநெறிக் கட்டணங்களும் 2020 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய பாடநெறிக் கட்டணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | வருமானத்தை இனங்காணும் போது வருமானம் உருவான காலப்பகுதிக்காக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் 2019 திசெம்பர் 31 ஆந் வரை Short Course, Workshop & Other இற்காக செலுத்த வேண்டிய செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,117,843 ஆன 15 மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அம்மீதிகளை விரைவில் தீர்வு செய்வதற்கும் மீளளிப்பதற்கும் தவறும் மீதிகளை முறையான அங்கீகாரத்திற்குட்பட்ட வகையில் Workshop & Event Fund இற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய அனைத்தையும் செலுத்தி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க | ஒவ்வொரு நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 03 | நாம் எதிர்வரும் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீடு அரசின் வரவு | நிதிச் சட்டத்தின் |

| | | | |
|---|---|---|---|
| நிதிச் சட்டத்தி 08(i) ஆம் பிரிவு | மாதங்களுக்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கு 4 மாதங்களுக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எமக்கு ஒதுக்கப்பட்ட மீண்டெழும் மானியம் மற்றும் மூலதன மானியங்கள் பற்றி திசெம்பர் மாதத்தில் அறிய தருகின்றது. அதன் பிரகாரம் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட வகையில் மூன்று மாதங்களுக்கு முன்னர் பாதீட்டை தயாரிக்கும் இயலளவு இல்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,838,955 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 40,804,151 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 24,965,196 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பாடநெறி கட்டணங்கள் ரூபா 39,861,425 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் நிதியம் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டிற்காக அவ்வப்போது 24 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிறுவகத்தின் பணம் நீண்டகாலமாக நிலையான வைப்புக்களாக நிறுத்தி வைத்து வங்கி வட்டி வருமானம் கிடைப்பது அவதானிக்கப்பட்டது. அந்நிதியம் மாணவர்களின் கல்வி நலன்புரி என்பவற்றை நிறைவேற்றும் வகையில் முறையான மற்றும் ஆக்கபூர்வமான வகையில் ஈடுபடுத்துவதன் மூலம் கூடுதலான மாணவர்களை பட்டப்பின் படிப்பினை பின்பற்றுவதற்காக சந்தர்ப்பத்தை வழங்க கூடியதாக இருக்கும். | அனைத்து மூலதன செலவினங்களும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நாம் உழைக்கும் வட்டி மற்றும் ஏனைய வருமானம் மிகவும் ஆக்கபூர்வமான வகையில் மாணவர்களின் பட்டப்பின் படிப்பு செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது. | கூடுதலான மாணவர்களை பட்டப்பின் படிப்பினை பின்பற்றுவதற்காக சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் பாடநெறிக் கட்டணங்களை குறைத்து மாணவர்களின் கல்வி நலன்புரி என்பவற்றை அதிகரிக்கும் வகையில் நிதியத்தை பயன்படுத்த வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2015 திசெம்பர் மாதத்தின் போது விநியோகிக்கப்பட்ட இலங்கை பல்கலைக்கழங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்பின் படிப்பு நிறுவனங்களில் பாடநெறி மீளாய்வு தொடர்பான கைநூலின் 7 ஆவது நியதியின் பிரகாரம் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளைத் திட்டமிடல், சரி பிழை பார்த்தல், தரப்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பாக பின்பற்றப்படும் திட்டவட்டமான நடைமுறையொன்று மற்றும் நியமங்கள் தயாரிக்கப்பட்டு ஆளுகை சபை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் ஆளுகை சபையினது அங்கீகாரம் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | விடைப்பத்திரங்களில் இரண்டாவது முறை சரி பிழை பார்ப்பதற்காக பேராதனை பல்கலைக்கழகத்தின் பேரவையின் அங்கீகாரத்தின் பேரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடைமுறையொன்று எமது நிறுவகத்தினால் பின்பற்றப்படுகின்றது. 1991 இன் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக்தின் வழிகாட்டி உப பந்தி 11(2)i இன் கீழ் குறிப்பிட்டதன் பிரகாரம் இந்நடைமுறையை அமுல்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் தேவையற்றது. அத்துடன் பல்கலைக்கழகத்தின் பேரவையின் அங்கீகாரம் போதுமானதென. | உரிய வழிகாட்டல்களுக்கு இணங்க சயற்பட வேண்டும். |
| (ஆ) | பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2016-2018 வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 1052 மாணவர்களில் பாடநெறியை பூர்த்தி செய்ய வேண்டிய உயர்ந்த காலப்பகுதியில் பாடநெறிகளைப் பூர்த்தி செய்யாத மாணவர்களின் எண்ணிக்கை 756 ஆக அதாலது 72 சதவீதத்தை எடுத்திருந்தது. | 2016/2017, 2017/2018, 2018/2019 கல்வியாண்டுகளில் மாணவர் களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் தவிர்க்க முடியாத காரணங்களின் பேரில் பூர்த்தி செய்வதற்கு முடியாமையால் நீடிக்கப்பட்டது. நாட்டில் காணப்படும் பாதுகாப்பு நிலைமை காணப்படும் கொவிட் வைரஸ் நிலைமை இம்மாணவர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு அதிகளவில் தாக்கமளித்துள்ளதால் ஆராய்ச்சிகளுக்கான அகழ்வு செயற்பாடுகள், ஆய்வுகூட செயற்பாடுகளில் அநேமான சந்தர்ப்பங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. | குறிதுக்கைக்கப்பட்ட காலப்பகுதியில் பாடநெறி களை பூர்த்தி செய்வதில் மாணவர்களின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.3 நிதியத்தின் குறை பயன்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் ஆராய்ச்சி மற்றும் புலமைப் பரிசில் வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிதியத்திலிருந்து இதுவரை எவ்வித புலமைப்பரிசில் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக செலவினம் மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்நிதியத்தில் ரூபா 7,771,002 ஆன மீதியொன்று காணப்பட்டது. | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 7,771,002 ஆன மீதியை அடிப்படையாக கொண்டு ஒரு ஆராய்ச்சிக்காக ரூபா 500,000 வீதம 12 ஆராய்ச்சி திட்டங்களுக்காக ஆராய்ச்சி மானிய முகாமைத்துவ சபை அங்கீகாரத்தின் கீழ் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக ஆராய்ச்சி முன்மொழிவு விண்ணப்பங்களை பகுப்பாய்வு செய்துகொள்வதற்கு எடுக்கப்பட்ட காலம் உத்தேச காலத்தை விஞ்சியிருந்தது. அவ்வாறே சில ஆராய்ச்சி விண்ணப்ப பகுப்பாய்வாளர்களின் ஆலோசணையின் பேரில் சீராக்கப்பட்டு வழங்குவதற்காக மீண்டும் பகுப்பாய்வு செய்யப்படும். | நிதியத்தை வழங்கப்பட்ட செயற்பாடுகளுக்காக செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,353,608 ஆன 08 ஆராய்ச்சி நிதியங்கள் 2020 ஆம் ஆண்டில் குறைப் பயன்பாட்டில் காணப்பட்டன. | ஆராய்ச்சி நிதியமொன்றின் மூன்று மீதிகள் இதுவரை மீள்நிரப்பி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 02 ஆராய்ச்சி நிதியங்கள் நிறைவு பெற்றுள்ளதுடன் அதன் மீதி பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி மற்றும் விசேட நிதியத்திற்கு மாற்றித் தருமாறு குறித்த விரிவுரையாளர்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள 03 ஆராய்ச்சி நிதிய மீதிகள் காணப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட Covid தொற்று நிலைமை காரணமாக ஆராய்ச்சி செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தமை காரணமாக சில ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்குரிய கொடுப்பனவுகளில் ஏதேனும் குறைவொன்று இடம் பெற்றுள்ளது. | நிதியத்தை வழங்கப்பட்ட செயற்பாடுகளுக்காக செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 09 பதவிகளில் 11 வெற்றிடங்களும் 02 பதவிகளில் 05 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் காணப்பட்டனர். நிறுவகத்தில் காணப்படும் வெற்றிடமான பதவிகளை விரைவில் நிரப்புவதற்கும் தேவைப்பாட்டின் பிரகாரம் மிகை பதவிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் 2017 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் குறிப்பின் பிரகாரம் 7 கல்வி பதவியணி வெற்றிடங்களில் 3 தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன் தற்காலிக ஆராய்ச்சி உதவி பதவிகள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஏனைய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு முகாமைத்துவ சபையின் பரிந்துரையின் பேரிலும் நிறுவகத்தின் தேவைப்பாடு மற்றும் கிரயத்தின் அளவிற்கு இணங்க மேற்கொள்ளப்படும். | வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கும் மிகை பதவிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

## 4. நல்லாளுகையும் கணக்களிபொறுப்பும்

### பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானம் / செலவினம் மற்றும் உள்ளவாறான வருமானம் / செலவினத்துடன் ஒப்பிடும் போது 05 வருமான விடயங்களில் 17 சதவீதம் முதல் 27 சதவீதம் வரையிலும் 05 செலவின விடயங்களில் 21 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டதால் பாதீடு செயற்திறனான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட Covid தொற்று நிலைமையின் கீழும் ஒப்பீடாக விலகலை குறைந்த அளவில் பேணிச்சென்று பாதீட்டை செயற்திறனான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் செயற்பட்டதாக | நடைமுறைச் சாத்தியமான வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்க இணங்க செயற்பட வேண்டும். |